உதயநிதி பிறந்த நாள்: தலைவர்கள், அமைச்சர்கள் வாழ்த்து

சென்னை, நவ. 27: திமுக இளைஞர் அணி செயலரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலினின் 49-ஆவது பிறந்த தினத்தையொட்டி, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

தனது பிறந்த தினத்தையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலினை வியாழக்கிழமை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். தொடர்ந்து, பெரியார் ஈ.வெ.ரா., அண்ணா, கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்களில் மரியாதை செலுத்தினார். சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பெரியார் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திமுக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி, ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை உதயநிதி வழங்கினார். பின்னர், கருணாநிதியின் கோபாலபுரம், சி.ஐ.டி.நகர் இல்லங்களில் அவரது படத்துக்கு மரியாதை செலுத்தினார்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில், திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலினிடம், தனது பிறந்தநாளையொட்டி வியாழக்கிழமை வாழ்த்து பெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். உடன், அவரது தாயார் துர்கா ஸ்டாலின்.

தொடர்ந்து, குறிஞ்சி இல்லத்தில் இளைஞர் அணி செயலர்களுடன் இணைந்து கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடினார். பேரவைத் தலைவர் மு.அப்பாவு, திமுக பொருளாளர் டி.ஆர். பாலு, திமுக மாவட்டச் செயலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எம்எல்ஏக்கள், காவல் துறை அதிகாரிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

மநீம தலைவர் கமல்ஹாசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு. செல்வப்பெருந்தகை, மதிமுகபொதுச்செயலர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் பெ.சண்முகம், இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன், விசிக தலைவர் தொல்.திருமாவளவன் உள்ளிட்ட கூட்டணி கட்சித் தலைவர்கள் உதயநிதிக்கு தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர்.

மேலும், தனக்கு பிறந்த நாள் பரிசாக வழங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருள்கள், உணவுப் பொருள்கள், உலர் பழங்கள், தின்பண்டங்களை தனது தொகுதியான சேப்பாக்கம்- திருவல்லிக்கேணியில் உள்ள ஆதரவற்றோர் இல்லங்களுக்குச் சென்று உதயநிதி வழங்கினார்.

மக்களுக்காக எப்போதும் களத்தில் நிற்க வேண்டும் உதயநிதிக்கு, முதல்வர் ஸ்டாலின் அறிவுரை

துணை முதல்வர் உதயநிதி, மக்களுக்காக எப்போதும் களத்தில் நிற்க வேண்டும் என்று திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வியாழக்கிழமை வெளியிட்ட பதிவு: கொள்கைப் பற்றோடு உழைப்பிலும் உயர்ந்து வரும் உதயநிதிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள். இளைஞரணிச் செயலராக, விளையாட்டுத் துறை அமைச்சராக, துணை முதல்வராக ஆற்றிவரும் பணிகளை மக்களும், திமுகவினரும் பாராட்டி வருவதைக் கேட்கும் போது, தந்தையாக மட்டுமல்ல, தலைவனாக மகிழ்ச்சி அடைகிறேன்.

திமுக தலைமைத் தொண்டனாக அறிவுறுத்துவது, காட்சிக்கு எளியனாக, கடுஞ்சொல் கூறாதவனாக, மக்களின் அன்புக்குரியவனாக, எப்போதும் அவர்களுக்காகக் களத்தில் நிற்பவனாகத் திகழ வேண்டும். இளைஞர்களிடம் திராவிட இயக்கக் கருத்தியலைத் தொடர்ந்து விதைத்து, அவர்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும் எனப் பதிவிட்டுள்ளார்.

சொத்துக் குவிப்பு வழக்கு: அமைச்சர் பெரியகருப்பன் உள்பட 4 பேர் விடுதலை

சிவகங்கை, நவ. 27: கடந்த 2012-ஆம் ஆண்டில் தொடுக்கப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உள்பட அவரது குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரை விடுதலை செய்து, சிவகங்கை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

கடந்த 2006 முதல் 2011-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராக கே.ஆர். பெரியகருப்பன் பதவி வகித்தார். அப்போது, வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு போலீஸார் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், அவரது மனைவி பிரேமா, தாய் கருப்பாயி, மகன் கோகுலகிருஷ்ணன், மைத்துனர் செந்தில்வேல் ஆகிய 5 பேர் மீது கடந்த 2012-ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை சிவகங்கையில் உள்ள மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அமைச்சரின் தாய் கருப்பாயி அம்மாள் காலமாகிவிட்டார். இதையடுத்து, மற்ற நான்கு பேர் மீதான வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் வியாழக்கிழமை தீர்ப்பளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதையடுத்து, அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், அவரது மனைவி, மகன், மைத்துனர் ஆகிய நால்வரும் சிவகங்கை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்னிலையாகினர். வழக்கை விசாரித்த நீதிபதி கே. அறிவொளி, இந்த வழக்கில் அரசுத் தரப்பில் அமைச்சர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்பதால், அமைச்சர் உள்ளிட்ட 4 பேரும் விடுதலை செய்யப்படுகின்றனர் என உத்தரவிட்டார்.

பள்ளிவாசல்கள் புனரமைப்புக்கு ரூ.4.45 கோடி மானியம்

சென்னை, நவ27: தமிழகத்தில் தொன்மையான 9 பள்ளிவாசல்கள், தர்காக்களில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.4.45 கோடி மானியத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் வழங்கினார்.

தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில், தமிழகத்தில் உள்ள தொன்மையான பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களை பழுதுபார்ப்பதற்காகவும் புனரமைப்பதற்காகவும், நிகழ் ஆண்டின் (2025-2026) நிதிநிதிலை அறிக்கையில் தமிழ்நாடுவக்ஃப் வாரியத்துக்கு அரசு மானியமாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில், 9 பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களில் பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு மானியத்தில் முதல் தவணையாக ரூ.4.45 கோடிக்கான காசோலைகளை சம்பந்தப்பட்ட பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

கருணை அடிப்படையில் நியமனம்: மேலும், இந்தத் துறையில் பணியின்போது இயற்கை எய்திய பணியாளர்களின் 50 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் விடுதி சமையலர் பணியிடத்துக்கான பணி நியமன ஆணைகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

செங்கோட்டையன் குறித்து கருத்துக் கூற ஒன்றுமில்லை

மதுரை, நவ. 27: செங்கோட்டையன் குறித்து கருத்துக் கூற ஒன்றுமில்லை என அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி தெரிவித்தார். மதுரையில் வியாழக்கிழமை நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் பங்கேற்ற எடப்பாடி கே. பழனிசாமியிடம், தவெகவில் இணைந்த பிறகு கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்த கருத்துகள் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு, 'ஒருவர் கருத்தில் மற்றொருவர் தலையிட முடியாது. ஜனநாயக நாட்டில் கருத்துச் சொல்ல அனைவருக்கும் உரிமை உண்டு. அவர் (செங்கோட்டையன்) தற்போது அதிமுகவில் இல்லை. எனவே, அவரைப் பற்றி கருத்துக் கூற ஒன்றுமில்லை' என்றார் அவர்.

'டித்வா' புயல்: 8 மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அதிகாரிகள் நியமனம்

சென்னை, நவ. 27: 'டித்வா' புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காவிரி டெல்டா, கடலோரப் பகுதிகளில் உள்ள 8 மாவட்டங்களுக்கு நீர்வளத் துறை சார்பில் கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

'டித்வா' புயல் முன்னெச்சரிக்கை தொடர்பாக நீர்வளத் துறைச் செயலர் ஜெ.ஜெயகாந்தன் தலைமையில், அந்தத் துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள் மற்றும் ஆறுகள் உள்ளிட்ட நீர்நிலைகளில் தேங்கியுள்ள ஆகாயத் தாமரைகள் மற்றும் குப்பைகளைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து அகற்றுமாறு அரசு செயலர் ஜெயகாந்தன் உத்தரவிட்டார்.

காவிரி கடைமடை பாசனப் பகுதிகளான நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர் மாவட்டங்களில் பொக்லைன் இயந்திரங்களைப் பயன்படுத்தி வடிகால் ஆறுகளில் உள்ள ஆகாயத் தாமரைகளை அகற்றவும், இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாத பகுதிகளில் வேலையாள்களைப் பயன்படுத்தி அகற்றவும் அறிவுறுத்தப்பட்டது.

8 கண்காணிப்பு அலுவலர்கள்: 'டித்வா' புயல் நிமித்தமாக வடகிழக்குப் பருவமழை தீவிரமடைய உள்ளதால் செங்கல்பட்டு, கடலூர், காஞ்சிபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் மழையை எதிர்கொள்ள எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கைப் பணிகளைக் கண்காணிக்கும் வகையில், நீர்வளத் துறையின் 8 கண்காணிப்புப் பொறியாளர்களைக் கண்காணிப்பு அலுவலர்களாக நியமித்து அரசு ஆணையிட்டுள்ளது.

இவர்கள் வரும் டிச. 2-ஆம் தேதி வரை அவரவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நடைபெற்று வரும் பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளை கள ஆய்வு செய்து, அரசு செயலர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

ஆருத்ரா தொடர்புடைய இடங்களில் சோதனை ரூ.1.50 கோடி ஆவணங்கள், ரூ. 22 லட்சம் பறிமுதல்

அமலாக்கத் துறை தகவல்

சென்னை, நவ. 27: ஆருத்ரா நிறுவனம் தொடர்புடைய இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில், ரூ.1.50 கோடி மதிப்புள்ள ஆவணங்கள், ரூ.22 லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டதாக அமலாக்கத் துறை தெரிவித்தது.

சென்னை அமைந்தகரை மேத்தாநகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்த ஆருத்ரா கோல்டு டிரெடிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 1,04,433 பேரிடம் ரூ.2,438 கோடி பெற்று மோசடி செய்தது. இந்த மோசடியில் சட்ட விரோத பணப்பரிமாற்றம் நிகழ்ந்தற்கான முகாந்திரம் இருந்ததால் அமலாக்கத்துறை தனியாக ஒரு வழக்கை பதிவு செய்து, விசாரணை செய்கிறது.

ரூ.1.51 கோடி ஆவணங்கள் பறிமுதல்: சென்னை, காஞ்சிபுரம், வேலூர், மும்பை, கொல்கத்தா ஆகிய பகுதிகளில் அந்த நிறுவனத்துக்குச் தொடர்புடைய 21 இடங்களில் அமலாக்கத் துறையினர் புதன்கிழமை ஒரே நேரத்தில் சோதனை செய்தனர். வியாழக்கிழமை சோதனை நிறைவு பெற்றது. சோதனையில் கணக்கில் வராத ரூ.1.50 கோடி சொத்து ஆவணங்கள், ரூ.22 லட்சம் ரொக்கம், டிஜிட்டல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: பொருளாதார குற்றப் பிரிவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்றப் பத்திரிக்கையில் 40 பேர் குற்றவாளியாக சேர்த்துள்ளது.

போலி இயக்குநர்கள்: மொத்தம் ரூ.2,438 கோடி ஆருத்ரா நிறுவனம் மோசடி செய்துள்ள நிலையில், ரூ.1,404 கோடி தொகையை முதலீட்டாளர்களுக்கு திருப்பி வழங்காமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் வங்கிக் கணக்குகள், அந்த நிறுவனத்துடன் தொடர்புடையவர்களின் வங்கி கணக்குளை ஆய்வு செய்ததில் ரூ.2,000 கோடிக்கு பணப் பரிமாற்றம் நடந்திருப்பது தெரியவந்துள்ளது. 1,230 பணப்பரிமாற்றங்கள் ஒவ்வொன்றும் ரூ.10 லட்சத்துக்கு மேல் நிகழ்ந்துள்ளன. இந்தப் பரிமாற்றங்களில் ரூ.1,060 கோடி கையாளப்பட்டுள்ளது.

பெரும்பாலான பணப்பரிமாற்றங்கள் பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை மடை மாற்றுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. முக்கியமாக பொதுமக்கள் முதலீடு செய்த பணம், மோசடி செய்யும் திட்டத்துடன் பல்வேறு தனிநபர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டு, முறைகேடு நடைபெற்றுள்ளது.

ஆருத்ரா நிறுவனத்தின் சில இயக்குநர்கள் போலியாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களை ஆருத்ரா நிறுவன நிர்வாகிகள், தங்களது கீழ்நிலை வேலைக்கு பயன்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டச் சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம்: யுஜிசி எச்சரிக்கை

சென்னை, நவ.27: பருவத்தேர்வு முடிவு வெளியான 180 நாள்களுக்குள் பட்டப் படிப்பு சான்றிதழ் வழங்காத கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என யுஜிசி எச்சரித்துள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) செயலர் மணிஷ் ஆர்.ஜோஷி, அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை: நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் சில உயர்கல்வி நிறுவனங்கள், உரிய காலகட்டத்துக்குள் பருவத் தேர்வுகளை நடத்துவதில்லை. பட்டப் படிப்பு சான்றிதழ்களையும் வழங்கவில்லை என்று யுஜிசியின் கவனத்துக்கு புகார் வந்துள்ளது. இந்த தாமதம் மாணவர்கள் தகுதியான வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு தடையாக உள்ளது. மேலும், அவர்களின் உயர் கல்விக்கும் இடையூறாக உள்ளது.

யுஜிசி விதியின்படி, மாணவர்கள் பட்டம் பெறத் தகுதி பெற்ற 180 நாள்களுக்குள், அவர்களுக்கு பட்டங்களை வழங்க வேண்டும். குறிப்பிட்ட கால அட்டவணையின்படி, மாணவர்களுக்கு பருவத் தேர்வுகள் நடத்தப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும்.

இந்த விதிகளைப் பின்பற்றாத உயர் கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு சான்றிதழ்களைத் தாமதமின்றி வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கரன்கோவில் நகராட்சி
குறுகிய கால மறு மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
(SHORT-RE-E-TENDER NOTICE)

ந.க.2366/2025/இ1 **நாள். 26.11.2025**

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் மூலம் தகுதி வாய்ந்த ஒப்பந்தாரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 02.12.2025 மாலை 03.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ (இலட்சத்தில்)	வைப்புத் தொகை ரூ.	பணி முடிக்கும் நாள்
1.	Selection of a Catering Agency for Providing Food to the Sanitary Workers of Sankarankovil Municipality.	1548.20	154892.00	

ஒப்பந்தப்புள்ளி விபர அட்டவணை மற்றும் நிபந்தனைகள் **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தில் **26.11.2025** முதல் இலவசமாக வளைதளத்தில் இணை இறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையர் அல்லது அன்னாரது அதிகாரம் பெற்ற அலுவலரால் **02.12.2025ம் தேதி பிற்பகல் 03.00 மணி வரை** மின்னணு முறையில் பெற்றுக்கொள்ளப்படும். மின்னணு மூலம் சமர்ப்பிக்காமல் நேரடியாக சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது நிராகரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி தகுதி தமிழ்நாடு அரசின் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி நடைமுறை விதிகள் மற்றும் அதை சார்ந்த விதிகளின்படி **02.12.2025ம் அன்று மாலை 03.30 மணிக்கு** ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகளுக்கான முன் வைப்புத்தொகையினை அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு மதிப்பீட்டில் 1 (ஒரு) சதவிகிதத்திற்கான தொகையினை இணையம் (Online) வாயிலாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். மின்னணு ஒப்பந்தத்திற்கு முன்வைப்புத் தொகை மற்றும் பரிசீலனை கட்டணத்தினை இணையம் (Online) வாயிலாக செலுத்தப்பட வேண்டும். நகராட்சி ஆணையருக்கு எந்தவித ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்கவோ மறுக்கவோ முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக அறிவிக்கும்பட்சத்தில் மறு வேலை நாளில் அதே நேரம் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

குறிப்பு: ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மின்னணு மூலம் சமர்ப்பிக்கப்படாமல் நேரடியாக சமர்ப்பிக்கப்பட்டால் எவ்வித காரணமும் காட்டாமல் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி: commr.sankarankoil@tn.gov.in
தொலைபேசி எண்: 04636-222236

ஆணையாளர்
சங்கரன்கோவில் நகராட்சி

செ.ம.தொ.இ / 6371 / ஒப்பந்தப்புள்ளி / 2025

YES BANK கோஸ்மோ ஒன், டவர் C, 2ஆவது தளம், பிளாட் எண். 14, 3ஆவது பிரதான சாலை, அம்பத்தூர், சென்னை - 600 058.

E-ஏல விற்பனை அறிவிப்பு

சர்:பாசி சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002இன் விதி 8(6)க்கான விதி விலக்கு-இன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு

ஜாமீன் பெற்று கடனளித்தவரால் சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட அசையா ஜாமீன் சொத்து, "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனைசெய்யப்படுவதற்காக, அதன் மீது விற்பப்முள்ள ஏலதாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகளை வரவேற்று, பொதுமக்கள் மற்றும் குறிப்பாக கடன்தாரர்(கள்) / கூட்டு கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(களுக்கு) இதன் மூலம், அறிவிப்பு வழங்கப்படுகிறது.

வ.எண். 1: கடன்தாரர் / கூட்டு கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் - **திரு.சண்முக முருகன்.S மற்றும் திருமதி.தனலட்சுமி** ஆகியோரிடமிருந்து 26.11.2025 ஆம் தேதியின் படி கடன் கணக்கு எண். AFH05230091321 3 & AFH05230123188 4இல் உள்ள நிலுவைத்தொகை ரூ.38,15,783.63/- மற்றும் மேற்கொண்டு வரும் ஒப்பந்த வீதத்திலான வட்டி மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்காக. சொத்து விபரம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், குண்டூர் கிராமம், சர்வே எண். 49/7 & 73/1இல் அமையப்பெற்ற 1022 சதுர அடி பரப்பளவு கொண்ட பிளாட் எண். 2 ன் மேற்கு பாக இடம் மற்றும் 888 சதுர அடி பரப்பளவு கொண்ட குடியிருப்பு கட்டிடம். அடிப்படை விலை ரூ.25,90,000/- மற்றும் டேவணித்தொகை ரூ.2,59,000/-

வ.எண். 2: கடன்தாரர் / கூட்டு கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் - **திரு. G.சங்கர் & திருமதி. விஜயலட்சுமி** ஆகியோரிடமிருந்து 26.11.2025 ம் தேதியின் படி கடன் கணக்கு எண். AFH05230087706 3 & AFH05230128750 2 இல் உள்ள நிலுவைத்தொகை ரூ.40,96,541.66/- மற்றும் மேற்கொண்டு வரும் ஒப்பந்த வீதத்திலான வட்டி மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்காக. சொத்து விபரம் : தஞ்சாவூர், கடகப்பை கிராமம், மேலசித்தர் காடு, ஜெய் க்ரீன் சிட்டி, ஜெய் க்ரீன் சிட்டியில் உள்ள 1184 சதுர அடி பரப்பளவு கொண்ட பிளாட் எண். 3 (வடக்கு பாகம்) அதில் கட்டப்பட்டு வரும் கட்டிடம்.
அடிப்படை விலை ரூ.34,24,000/- மற்றும் டேவணித்தொகை ரூ.3,42,400/-

சொத்து ஆய்வு நாள் மற்றும் நேரம்: 11 டிசம்பர் 2025 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை.

விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி - 26 டிசம்பர் 2025 மாலை 05.00 மணி வரை.

E-ஏல நாள் மற்றும் நேரம்: 29 டிசம்பர் 2025 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை 5 நிமிடம் நேர நீட்டிப்புடன்.

இதன் மேற்கண்ட அறிவிப்பை, பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002இன் விதி 9(1) உடன் படிக்க விதி 8(6) இன் கீழானது எனவும் கருதப்பட வேண்டும்.

மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(8)க்கிணங்க, எமது நிலுவைகளை அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் எமக்கு ஏற்பட்ட செலவுகள் ஆகியவற்றுடன் பொது ஏலம் / விற்பனைக்கான அறிவிப்பு பிரசுர தேதிக்கு முன்பு எந்த நேரத்தில் செலுத்தப்பட்டாலும், எம்மால் ஜாமீன் சொத்து விற்பனையோ அல்லது பரிமாற்றமோ செய்யப்ட மாட்டாது. மேலும் ஜாமீன் சொத்தை பரிமாற்றவோ அல்லது விற்பனை செய்யவோ எம்மால் எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தயவு கூர்ந்து வலைதளம் - https://www.yesbank.in/about-us/media/auction-property ஜாமீன் பெற்று கடனளித்தவரின் வலைதளம் - www.yesbank.inஇல் உள்ள தொடர்பை பார்வையிடவும். விலைப்புள்ளி ஆவணங்கள் / E-விலைகோரல் குறுந்தகவல் ஏடு ஆகியவற்றை பெறுவதில் ஏதேனும் சிரமம் இருந்தாலோ அல்லது அசையா சொத்துக்கள் / ஜாமீன் சொத்துக்களை ஆய்வு செய்வதற்கோ இதர விசாரணைகளுக்கோ தயவு கூர்ந்து எஸ் பேங்க் லிமிடெட் - இன் அலுவலர்கள் திரு. விவேகானந்தன் R - அலைபேசி எண். 99947 61871 அல்லது மின்னஞ்சல் - vivekanandan.r2@yesbank.in ; M/s. e-Procurement Technologies Limited, அஹமதாபாத் - இன் அலுவலர்கள், தொடர்பு நபர் : திரு. ராம் ஷர்மா - அலைபேசி எண்: 8000023297 , விலைப்புள்ளி கோருவோர் உதவிக்கான தொடர்பு எண். 92655 62818 / 92655 62821 / 079 - 6813 6842 / 6869 மின்னஞ்சல் முகவரி - support@auctiontiger.net, ramprasad@auctiontiger.net வலைதளம் - https://sarfaesi.auctiontiger.net ல் தொடர்பு கொள்ளவும்.

நாள்: 28.11.2025 **ஒ/ம்- (அதிகாரப்பூர்வ அலுவலர்)**
இடம்: சென்னை **எஸ் பேங்க் லிமிடெட்.,**

படிவம் G
விருப்ப வெளியீட்டு அழைப்பு
(இந்திய நிலால் மற்றும் நொடிப்பு நிலை வாரியம் (பெருநிறுவனதாரர்களுக்கான நிலால் தீர்வு நடைமுறை) ஒழுங்குமுறைகள் 2016, ஒழுங்குமுறை 36A- இன் உள் ஒழுங்குமுறை (1)-இன் கீழ்)

தொடர்புடைய விபரங்கள்

1.	பெருநிறுவன கடன்தாரர் பெயர் மற்றும் PAN / CIN / LLP எண்	G K இன்டஸ்ட்ரியல் பார்க் பிரைவேட் லிமிடெட் CIN எண்: U45200TN2007PTC065754
2.	பதிவு அலுவலக முகவரி	30, சென்னை புறவழிச் சாலை, மண்ணாடிபுரம், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு 620020
3.	இணையத்தள முகவரி	https://stressedd.com/
4.	பெருப்பாலான அசையாச் சொத்துகள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	GK இன்டஸ்ட்ரியல் பார்க் பிரைவேட் லிட்., வாய்ஸ்டு சாலை, செட்டிபாளையம் கிராமம், திருச்சிராப்பள்ளி - 621 105.
5.	பிரதானத் தயாரிப்புகளின் / சேவைகளின் நிறுவப்பட்ட திறன்	இந்த நிறுவனமானது கனரக பொறியியலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நிலவங்கியைக் கொண்டுள்ளது.
6.	கடைசி நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட பிரதானத் தயாரிப்புகளின் / சேவைகளின் அளவு மற்றும் மதிப்பு	கடந்த நிதியாண்டில் பிரதான சேவையின் மதிப்பு ரூ. 37,76,280
7.	ஊழியர்கள் / பணியாளர்கள் எண்ணிக்கை	ஊழியர்கள் - 3 தொழிலாளர்கள் - 10
8.	கடைசியாகக் கிடைத்த இரண்டு ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள் (ஆட்டவணைகளுடன்), கடனளித்தவர்கள் பட்டியல் உள்ளிட்ட மேலதிக தகவல்கள் கிடைக்கும் இணையத்தளம் :	https://stressedd.com/
9.	சட்டத்தொகுப்புப் பிரிவு 25(2)(h)-இன்படி தீர்வு விண்ணப்பதாரர்களுக்கான தகுதி வரையறை கிடைக்கும் இணையத்தளம் :	IBC பிரிவு 29A இன் கீழ் தகுதி நிர்ணய செய்யப்படாத அனைத்து விண்ணப்பதாரர்களும்
10.	விருப்ப வெளியீடுகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்	13/12/2025
11.	ஆர்வமுள்ள தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிகப் பட்டியல் வெளியிடப்படும் நாள்	15/12/2025
12.	தற்காலிகப் பட்டியல் குறித்த ஆட்சேபணைகளைத் தாக்கல் செய்யக் கடைசி நாள்	20/12/2025
13.	ஆர்வமுள்ள தீர்வு விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் நாள்	23/12/2025
14.	ஒப்பந்த தகவல், மதிப்பீட்டு ஆட்டவணை மற்றும் தீர்வுத் திட்டங்களுக்கான கோரிக்கை ஆகியவற்றை ஆர்வமுள்ள தீர்வு விண்ணப்பதாரர்களுக்கு வழங்கும் நாள்	24/12/2025
15.	தீர்வுத் திட்டங்கள் தாக்கல் செய்யக் கடைசி நாள்	23/01/2026
16.	விருப்ப வெளியீடுகளைத் தாக்கல் செய்வதற்கான மின்னஞ்சல் முகவரி	gkindustrialcorp@gmail.com
17.	MSME ஆக பெருநிறுவனக் கடன்தாரரின் பதிவு நிலையின் விவரங்கள்.	ஆம்

நாள் : 28/11/2025 ஒ/ம்-
இடம்: மும்பை சச்சின் ஸ்ரீனிவாஸ் பட்டாட்
IBBI/IPA-001/IP-P00680/2017-2018/11159
G K இன்டஸ்ட்ரியல் பார்க் பிரைவேட் லிமிடெட்-க்காக

MINISTRY OF LABOUR & EMPLOYMENT
GOVERNMENT OF INDIA

**தொழிலாளர் ச